செ. கு. எண்: 035 நாள் : 11.02.2014

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

# அறிக்கை – 11.2.2014

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், வடமதுரை கூட்ரோடு அருகே 12.1.2014 அன்று வேனில் பயணம் செய்த மொன்னவேடு பேட்டை காலனி கிராமத்தைச் சேர்ந்த, மொன்னவேடு ஊராட்சி மன்றத் தலைவர் திரு. கோட்டைசாமி என்பவரின் மனைவி மஞ்சுளா, திரு. நாகன் என்பவரின் மனைவி எளையாத்தா, திரு. திருவீதி என்பவரின் மகன் ஏழுமலை, திரு. கோட்டைசாமி என்பவரின் மனைவி சுசிலா மற்றும் திரு. சின்னையன் என்பவரின் மனைவி குலுங்கம்மாள்;

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், செங்கல்பட்டு – தாம்பரம் ஜி.எஸ்.டி. சாலையை 12.1.2014 அன்று கடக்க முயன்ற கூடுவாஞ்சேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. முத்துமாணிக்கம் என்பவரின் மகன் கமலச்செல்வன்;

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், கும்பகோணம் – தஞ்சாவூர் புறவழிச் சாலை அருகே 12.1.2014 அன்று இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த சுந்தரபெருமாள்கோயில் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் என்பவரின் மகன் முருகேசன்;

திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டம், கத்திவாக்கம் அருகே 16.1.2014 அன்று இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த எண்ணூர் தாழங்குப்பம் பகுதியைச் சேர்ந்த திரு. குமார் என்பவரின் மகன் சரவணன்;

திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் அருகே 18.1.2014 அன்று இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த திருமுல்லைவாயல் கிராமத்தைச் சேர்ந்த திரு. வையாபுரி என்பவரின் மகன் தினேஷ்;

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், மோ.வன்னஞ்சூர் கிராமம் அருகே 18.1.2014 அன்று இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த மோகூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. அய்யன் என்பவரின் மகன் கண்ணன்;

மதுரை மாவட்டம், பெருமாள்பட்டி கிராமம், மேலூர் - சிவகங்கை சாலையில் 18.1.2014 அன்று ஆட்டோவில் பயணம் செய்த மேலூர் மில்கேட் பகுதியைச் சேர்ந்த திரு. சந்திரன் என்பவரின் மகன் மணிகண்டன்;

–– ஆகியோர் அரசுப் பேருந்து மோதியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்துகளில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9